| D–4612 |
|---|

| Sub. Code |
|---|
| 31011/33511 |

DISTANCE EDUCATION

COMMON FOR M.Com./M.Com. (F&C) DEGREE EXAMINATION, MAY 2024

First Semester

# MANAGEMENT CONCEPTS

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

## SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. Define the term management.

   மேலாண்மை எனும் பதத்தை வரையறுக்க.

2. Define the term Planning.

   திட்டமிடுதல் எனும் பதத்தை வரையறுக்க.

3. What is meant by decision making?

   முடிவெடுத்தல் என்றால் என்ன?

4. What is meant by decentralisation?

   பரவலாக்கம் பற்றி அறிவது என்ன?

5. What is span of control?

   கட்டுப்பாட்டு எல்லை என்றால் என்ன?

6. What is meant by communication?

   தகவல் தொடர்பு என்பதன் பொருள் யாது?

7. What is meant by Leadership?

   தலைமைத்துவம் பற்றி அறிவது என்ன?

8. Define the term directing.

இயக்குவித்தல் எனும் பதத்தை வரையறுக்க.

9. Define Management Audit.

மேலாண்மை தணிக்கையை வரையறுக்க.

10. What do you mean by TQM?

TQM பற்றி நீவிர் அறிவது என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choose either (a) or (b).

11. (a) Briefly explain the importance of management.

மேலாண்மையின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

Or

(b) Briefly explain the various types of policies.

கொள்கையின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரிக்க.

12. (a) Briefly explain the various types of managerial decisions.

மேலாண்மை முடிவெடுத்தலின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விளக்குக.

Or

(b) What are the principles of departmentation?

துறைமயமாக்கத்தின் கோட்பாடுகள் யாவை?

13. (a) What are the obstacles to delegation?

ஒப்படைவிற்கான தடைகள் யாவை?

Or

(b) State the functions of a leader.

ஒரு தலைமை ஏற்பவரின் பணிகளை கூறுக.

14. (a) Distinguish between formal and informal communication.

முறையான மற்றும் முறையற்ற தகவல் தொடர்பினை வேறுபடுத்துக.

Or

(b) Explain the importance of co-ordination.

ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை விளக்குக.

15. (a) What are the principles of business ethics?

வணிக நெறிமுறைகளின் கோட்பாடுகள் யாவை?

Or

(b) Write short notes on strategic alliance.

நுட்பவியல் இணைவு பற்றி சிறு குறிப்பு வரைக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Explain the various stages in the history of management thought.

மேலாண்மைச் சிந்தனை வரலாற்றி பல்வேறு படிநிலைகளை விளக்குக.

17. Describe the various process of decision making.

முடிவெடுத்தலின் பல்வேறு செயல்முறைகளை விவரிக்க.

18. Explain the principles of organization in detail.

அமைப்பின் கொள்கைகளை விரிவாக விளக்குக.

19. Explain the different types of leadership styles in brief.

தலைமைத்துவத்தின் பல்வேறு வகையான பணிகளை சுருக்கமாக விவரிக்க.

20. Discuss the advantages of management audit.

மேலாண்மை தணிக்கையின் நன்மைகளை விவாதிக்க.

**D–4613**

| **Sub. Code** |
|---|
| **31012** |

DISTANCE EDUCATION

M.Com. DEGREE EXAMINATION, MAY 2024.

First Semester

MANAGERIAL ECONOMICS

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. Define Managerial Economics.

   மேலாண்மை பொருளாதாரத்தை வரையறுக்க.

2. Define Elasticity of Demand.

   தேவை நெகிழ்ச்சியை வரையறுக்க.

3. What is Production Function?

   உற்பத்தி சார்பு என்றால் என்ன?

4. What is meant by National Income?

   தேசிய வருமானம் பற்றி அறிவது என்ன?

5. Define Perfect Competition.

   நிறைவு போட்டியை வரையறுக்க.

6. What is Industrialisation?

   தொழிற்சாலைமயமாக்கல் என்றால் என்ன?

7. What is meant by Public Finance?

பொதுநிதி பற்றி அறிவது என்ன?

8. What is Inflation?

பணவீக்கம் என்றால் என்ன?

9. What is Product Line?

பொருள் தொடர் என்றால் என்ன?

10. What is meant by Public Enterprises?

பொது நிறுவனங்கள் பற்றி அறிவது என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Explain the nature of economics.

பொருளாதாரத்தின் இயல்புகளை விளக்குக.

Or

(b) Explain law of demand. State its exceptions.

தேவை விதியை விளக்குக மற்றும் அதனுடைய விதிவிலக்குகளை தருக.

12. (a) Distinguish between short term and long term forecasting.

குறுகியகால கணிப்பு மற்றும் நீண்டகால கணிப்பை வேறுபடுத்துக.

Or

(b) What are the characteristics of perfect completion?

நிறைவுப் போட்டியின் குணாதிசயங்கள் யாவை?

13. (a) What is Fiscal policy? Explain its objectives.

நிதி கொள்கை என்றால் என்ன? அதனுடைய நோக்கங்களை விளக்குக.

Or

(b) What are the salient features of industrial policy?

தொழில் கொள்கையின் சிறப்பியல்புகள் யாவை?

14. (a) Briefly explain the various phases of business cycle.

வணிக சுழற்சியின் பல்வேறு படிநிலைகளை சுருக்கமாக விளக்குக.

Or

(b) What are the assumptions of consumer's surplus?

நுகர்வோர் உபரியின் எடுகோள்கள் யாவை?

15. (a) Explain the different types of foreign direct investment.

அன்னிய நேரடி முதலீட்டின் பல்வேறு வகைகளை விவரிக்க.

Or

(b) Explain the role of public sector in India.

இந்திய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விளக்குக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Describe the fundamental concept of managerial economics.

மேலாண்மை பொருளியலின் அடிப்படை கருத்தாக்கத்தை விவாதிக்க.

17. Explain the factors which affect elasticity of demand.

விலைத் தேவை நெகிழ்ச்சியை பாதிக்கும் காரணிகளை விளக்குக.

18. List out the major achievements of economic planning in India.

இந்தியாவின் பொருளாதார திட்டமிடலின் முக்கிய சாதனைகளைப் பட்டியலிடுக.

19. Explain the managers' attitude towards risk and uncertainty in managerial economics.

மேலாண்மை பொருளியலில் இடர் மற்றும் நிலையற்றதன்மை தொடர்பான மேலாளரின் மனப்பான்மையை விளக்குக.

20. Describe the performance of public enterprises in India.

இந்தியாவிலுள்ள பொதுத்துறை நிறுவனத்தின் செயல்திறனை விவாதிக்க.

———————

| D–4614 |
|---|

| Sub. Code |
|---|
| 31013/33513 |

DISTANCE EDUCATION

Common for M.Com./M.Com. (F&C) DEGREE
EXAMINATION, MAY 2024.

First Semester

ADVANCED ACCOUNTING

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions

1. What is Book Keeping?
   கணக்கு வைப்பு என்றால் என்ன?

2. What is Posting?
   எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

3. What is Trading account?
   வியாபார கணக்கு என்றால் என்ன?

4. What is average due date?
   சராசரி தவணை நாள் என்றால் என்ன?

5. What is Bank Reconciliation Statement?
   வங்கி சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?

6. What is income and expenditure account?
   வருவாய் செலவின கணக்கு என்றால் என்ன?

7. What is depreciation?

தேய்மானம் என்றால் என்ன?

8. What is meant by Short Workings?

குறை உற்பத்தி பற்றி அறிவது என்ன?

9. State any two objects of keeping branch accounts?

கிளைக் கணக்கை வைத்திருப்பதின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டு கூறுக.

10. Define the term Hire Purchase.

வாடகை கொள்முதல் எனும் பதத்தை வரையறுக்க.

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) Explain the various types of accounting concepts.

கணக்கியல் கோட்பாட்டின் பல்வேறு வகைகளை விளக்குக.

Or

(b) Distinguish between Journal and Ledger.

குறிப்பேடு மற்றும் பேரேட்டை வேறுபடுத்துக.

12. (a) Prepare Trial Balance from the following information:

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Capital | 9,000 | Rent Outstanding | 1,000 |
| Plant and Machinery | 12,000 | Opening Stock | 2,000 |
| Purchases | 8,000 | Sales Returns | 4,000 |
| Sales | 12,000 | Investment | 14,000 |
| Creditors | 8,000 | Debtors | 12,000 |
| Bank Loan | 22,000 | | |

பின்வரும் விவரங்களிலிருந்து இருப்பு சோதனையை தயாரிக்க:

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 9,000 | கொடுபடவேண்டிய வாடகை | 1,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 12,000 | தொடக்க சரக்கிருப்பு | 2,000 |
| கொள்முதல் | 8,000 | விற்பனை திருப்பம் | 4,000 |
| விற்பனை | 12,000 | முதலீடுகள் | 14,000 |
| கடனீந்தோர்கள் | 8,000 | கடனாளிகள் | 12,000 |
| வங்கி கடன் | 22,000 | | |

Or

(b) Rectify the following errors:

(i) Purchase book is overcast by Rs.3,000

(ii) Sales book has been under cast by Rs.2,600

(iii) Purchase return book has been overcast by Rs.300

(iv) Sales return book has been under cast by Rs.350

பின்வரும் பிழைகளை திருத்துக:

(i) கொள்முதல் ஏடானது ரூ.3,000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.

(ii) விற்பனை ஏடானது ரூ.2,600 குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(iii) கொள்முதல் திருப்ப ஏடு ரூ.300 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.

(iv) விற்பனை திருப்ப ஏடு ரூ.350 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.

13. (a) Find out the average due date of the following bills accepted by a trader who wishes to settle them with one single payment.

| Date of Bill | Amount of Bill | Due Date |
|---|---|---|
| March 15 | Rs.1,000 | 18 April |
| April 21 | Rs.1,500 | 24 May |
| April 27 | Rs.500 | 30 June |
| May 15 | Rs.600 | 18 July |

ஒரே தவணையில் வாங்கிய தொகையை திரும்ப செலுத்த விரும்பும் ஒரு வணிகரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் மாற்றுச்சீட்டுக்கு சராசரி தவணை நாளைக் கணக்கிடுக.

| மாற்றுச்சீட்டின் தேதி | மாற்றுச்சீட்டின் தொகை | முதிர்வு தேதி |
|---|---|---|
| மார்ச் 15 | ரூ.1,000 | 18 ஏப்ரல் |
| ஏப்ரல் 21 | ரூ.1,500 | 24 மே |
| ஏப்ரல் 27 | ரூ.500 | 30 ஜூன் |
| மே 15 | ரூ.600 | 18 ஜூலை |

Or

(b) The Bank Overdraft of Mr. Sudhakar on 31-12-2018 as Cash Book is Rs.9,000.

From the following particulars, prepare bank reconciliation statement:

(i) Unpresented cheques Rs.5,000

(ii) Uncleared cheques Rs.2,700

(iii) Bank interest debited in the pass book only Rs.500

(iv) Bills collected and credited in the pass book only Rs.800

(v) Cheque of Ashok dishonoured Rs.500

(vi) Cheque issued to Sagar entered in the cash column of the cash book Rs.300

31-12-2018 அன்று திரு. சுதாகர் என்பவரின் ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று ரூ.9,000. பின்வரும் விபரங்களிலிருந்து வங்கி சரிகட்டும் பட்டியலை தயாரிக்க.

(i) சமர்ப்பிக்கபடாத காசோலைகள் ரூ.5,000

(ii) வசூலிக்காத காசோலைகள் ரூ.2,700

(iii) வங்கி செல்லேட்டில் மட்டும் பற்று வைக்கப்பட்டுள்ள வங்கி வட்டி ரூ.500

(iv) வங்கி செல்லேட்டில் மட்டும் வசூலாக்கப்பட்டு வரவு வைக்கப்பட்ட உண்டியல் ரூ.800

(v) அசோக்கின் காசோலை அவமதிக்கப்பட்டது ரூ.500

(vi) சாகருக்கு விடுத்த காசோலை ரொக்க ஏட்டின் ரொக்க பத்தியில் பதிவு செய்யப்பட்டது ரூ.300

14. (a) A & Co. of Tirunelveli consigned 1,000 radios at Rs.700 each to B & Co. of Madurai. The consignors paid freight Rs.750, cartage Rs.50 and insurance Rs.200. B & Co. received 900 radios only and incurred the following expenses: Octroi and other expenses Rs.1,000; Cartage Rs.800; Selling expenses Rs.600. The consignee sold 600 radios only. You required to find out the value of closing stock.

திருநெல்வேலியிலுள்ள A & கோ மதுரையிலுள்ள B & கோவிற்கு ஒன்று ரூ.700 வீதம் 1,000 வானொலி பெட்டியை அனுப்பீடு செய்தது. அனுப்பீடு செய்ததிற்காக ரூ.750ம் தூக்கு உரிமைக்கு ரூ.50ம் காப்பீட்டுக்காக ரூ.200ம் செலவு செய்தது. B & கோ 900 வானொலி பெட்டியை மட்டும் பெற்றது மற்றும் பின்வரும் செலவுகளை செய்தது: எரிவளி மற்றும் இதர செலவினங்கள் ரூ.1,000மும், தூக்கு கூலி ரூ.800ம் விற்பனை செலவினங்கள் ரூ.600 ஆகும். அனுப்பீடு பெறுநர் 600 வானொலி பெட்டியை மட்டும் விற்பனை செய்தது. இறுதி சரக்கிருப்பின் மதிப்பை நீவிர் காண்க.

Or

(b) What do you mean by recoupment of short working? Explain its types.

குறை உற்பத்தி மீட்பு என்றால் என்ன? இதனுடைய பிரிவுகளை விளக்குக.

15. (a) Raman Departmental stores has two departments A and B. from the following, prepare departmental trading accounts.

Purchases:

| | | |
|---|---|---|
| Department A | 1000 units | Total Cost of Rs.1,10,000 |
| Department B | 2000 units | |

Opening Stock:

| | |
|---|---|
| Department A | 400 units |
| Department B | 600 units |

Sales:

| | |
|---|---|
| Department A | 900 units @ Rs.75 per unit |
| Department B | 2100 units @ Rs.45 per unit |

Assume the G.P. rate is uniform for both the departments.

ராமா துறைவாரி பண்டகசாலையில் இரண்டு துறைகள் உள்ளன. முறையே A மற்றும் B, பின்வருவனவற்றை கொண்டு துறைவாரி வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

கொள்முதல் :

| | | | |
|---|---|---|---|
| துறை A | : | 1,000 அலகுகள் | மொத்த விலை ரூ.1,10,000 |
| துறை B | : | 2,000 அலகுகள் | |

ஆரம்ப சரக்கு :

| | | |
|---|---|---|
| துறை A | : | 400 அலகுகள் |
| துறை B | : | 600 அலகுகள் |

விற்பனை :

| | | |
|---|---|---|
| துறை A | : | 900 அலகுகள் @ ரூ.75 ஒரு அலகு |
| துறை B | : | 2100 அலகுகள் @ ரூ.45 ஒரு அலகு |

மொத்த லாபம் வீதம் அனைத்து துறைகளில் சமம் எனக் கொண்டு துறைவாரி வியாபாரக் கணக்கு தயார் செய்க.

Or

(b) From the H.O at Chennai goods were invoiced to branch at Salem at cost plus 20%. From the following particulars prepare branch account in H.O books.

| | Rs. | | Rs. |
|---|---|---|---|
| Goods sent to Branch | 2,11,872 | Branch Debtors on 1.1.2016 | 24,000 |
| Total Sales | 2,06,400 | Branch Stock on 1.1.2016 | 7,680 |
| Cash Sales | 1,10,400 | Branch Stock on 31.12.2016 | 13,440 |
| Cash received from branch debtors | 88,000 | | |

சென்னை தலைமை அலுவலகத்திலிருந்து சேலம் கிளைக்கு சரக்குகள் அடக்கவிலையில் 20% சேர்த்து பட்டியலிடப்படுகிறது. கீழ்க்கண்ட விபரங்களில் இருந்து தலைமை அலுவலக புத்தகத்தில் கிளைக் கணக்கை தயார் செய்க.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கிளைக்கு சரக்கு அனுப்பியது | 2,11,872 | 1.1.2016ல் கிளை கடனாளிகள் | 24,000 |
| மொத்த விற்பனை | 2,06,400 | 1.1.2016ல் சரக்கு | 7,680 |
| ரொக்க விற்பனை | 1,10,400 | 31.12.2016ல் கிளை சரக்கு | 13,440 |
| கிளைக் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 88,000 | | |

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Distinguish between single entry system a double entry system.

ஒற்றை பதிவு முறை மற்றும் இரட்டை பதிவு முறையை வேறுபடுத்துக.

17. A small trader does not maintain proper books of account. From the following information prepare trading and profit and loss account for the year ended 31st December 2018 and balance sheet as on that date.

| | 31.12.2017 (Rs.) | 31.12.2018 (Rs.) |
|---|---|---|
| Debtors | 9,000 | 12,500 |
| Stock | 4,900 | 6,600 |
| Furniture | 500 | 750 |
| Analysis of other transactions: | | Rs. |
| Cash collected from debtors | | 30,400 |
| Cash paid to creditors | | 22,000 |
| Salaries | | 6,000 |
| Rent | | 750 |
| Office expenses | | 900 |
| Drawings | | 1,500 |
| Fresh capital introduced | | 1,000 |
| Cash sales | | 750 |
| Cash purchases | | 2,500 |
| Discount received | | 350 |
| Discount allowed | | 150 |
| Returns inwards | | 500 |
| Return outwards | | 400 |
| Bad debts | | 100 |
| New furniture purchased | | 250 |

He had Rs.2,500 cash at the beginning of the year.

ஒரு சிறிய வியாபாரி தனது ஏடுகளை முறையாக பராமரிக்கவில்லை. பின்வரும் விவரங்களிலிருந்து 31.12.2018 அன்று முடிவுறும் வியாபார இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பை தயாரிக்க.

| | 31.12.2017 (ரூ.) | 31.12.2018 (ரூ.) |
|---|---|---|
| கடனாளிகள் | 9,000 | 12,500 |
| சரக்கிருப்பு | 4,900 | 6,600 |
| அறைகலன் | 500 | 750 |

இதர நடவடிக்கைகளின் தொகுப்பு:

| | ரூ. |
|---|---|
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 30,400 |
| கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 22,000 |
| சம்பளம் | 6,000 |
| வாடகை | 750 |
| அலுவலக செலவினங்கள் | 900 |
| எடுப்பு | 1,500 |
| கூடுதல் முதல் இட்டது | 1,000 |
| ரொக்க விற்பனை | 750 |
| ரொக்க கொள்முதல் | 2,500 |
| பெற்ற தள்ளுபடி | 350 |
| அளித்த தள்ளுபடி | 150 |
| உள் திருப்பம் | 500 |
| வெளி திருப்பம் | 400 |
| வராக்கடன் | 100 |
| புதிய அறைகலன் வாங்கியது | 250 |

ஆண்டுத் தொடக்கத்தில் அவர் ரூ.2,500 ரொக்கம் வைத்திருந்தார்.

18. Mr. Ram draw a bill for Rs. 15,000 on Mr. Gopal on 1st January payable three months after date at Canara Bank, Tirunelveli. The bill after acceptance is discounted by Ram at 6% p.a. and he remits 1/3 of the proceeds to Gopal. On the due date Ram sends the necessary amount to Gopal who meets the bill. Record these transactions in the journal of both the parties.

ஜனவரி 1-ம் தேதியன்று மூன்று மாதங்கள் கழித்து திருநெல்வேலியிலுள்ள கனரா வங்கியில் செலுத்ததக்க வகையில் ரூ.15,000 மதிப்புள்ள மாற்றுச் சீட்டை திரு. கோபால் மீது திரு. ராம் என்பவர் எழுதினார். பின்னர் அந்த மாற்றுச் சீட்டை ஏற்ற பிறகு ஆண்டு ஒன்றுக்கு 6% தள்ளுபடியில் வங்கியில் ராம் என்பவர் வட்டம் செய்தார். பின்னர் அதில் 1/3 பங்கை கோபாலுக்கு செலுத்தினார். முதிர்வு நாளில் கோபால் என்பவர் மாற்றுச்சீட்டை எதிர்கொள்ளும் பொருட்டு திரு.ராம் என்பவர் போதுமான தொகையை அனுப்பினார். இவருடைய குறிப்பேட்டிலும் இந்த நடவடிக்கைகளை பதிவு செய்க.

19. Mr. Ram wrote a book on statistical and got its published with M/S Pass Publishers on terms that royalties will be paid @ Rs.5 per copy sold subject to a minimum rent of Rs. 15,000 with a right of recoupment of short working over the first three years of the royalty agreement.

| Year | No. of Copies Printed | Closing Stock |
|---|---|---|
| 2017 | 4,000 | 200 |
| 2018 | 6,000 | 400 |
| 2019 | 8,000 | 800 |
| 2020 | 10,000 | 1,000 |

Prepare royalty account for first three years.

திரு. ராம் என்பவர் ஒரு புள்ளியியல் புத்தகத்தை எழுதி அதை பாஸ் பதிப்பகம் வாயிலாக வெளியிட்டார். குத்தகை 1 பிரதிக்கு ரூ.5 வீதம் குறைந்தபட்ச குத்தகை ரூ.15,000-ம் குறை உற்பத்தியை முதல் மூன்று ஆண்டுகளில் மீட்டுக் கொள்ளலாம்.

| வருடம் | அச்சடித்த பிரதிகளின் எண்ணிக்கை | இறுதி சரக்கு |
|---|---|---|
| 2017 | 4,000 | 200 |
| 2018 | 6,000 | 400 |
| 2019 | 8,000 | 800 |
| 2020 | 10,000 | 1,000 |

குத்தகை கணக்கு முதல் மூன்று ஆண்டுக்கு தயாரிக்க.

20. Kumar purchased a machine on Hire Purchase System on 1st January 2018. The terms of payment are four annual installments of Rs. 12,690 at the end of each year. Interest is charged @ 5% and is included in the annual payment of Rs. 12,690.

Show machinery account and hire vendor account in the books of Kumar who defaulted in the payment of the third yearly payment where upon the vendor reposed the machinery. Kumar provides depreciation on the machinery @ 10% p.a. on reduced balance.

1 ஜனவரி 2018ல் குமார் ஒரு இயந்திரத்தை வாடகைக் கொள்முதல் முறையில் வாங்கினார். கொடுத்தலின் சரத்துகளாவன: ஒவ்வொரு ஆண்டு முடிவிலுமாக ரூ.12,690 நான்கு ஆண்டுத் தவணைகள் ஆகும். வட்டி 5% வசூலிக்கப்படுகிறது. வட்டியானது ஆண்டு செலுத்துதல் ரூ.12,690-ல் சேர்ந்துள்ளது.

குமாரின் புத்தகத்தில் இயந்திரக் கணக்கையும் வாடகை விற்பனையாளர் கணக்கையும் காண்பி. மூன்றாவது ஆண்டுத் தவணையை அவர் கட்டத் தவறியதனால் விற்பனையாளர் இயந்திரத்தை திரும்ப எடுத்துக் கொண்டார். குறைந்து செல் மதிப்பு முறையில் குமார் இயந்திரத்தின் மீது 10% ஆண்டுக்கு தேய்மானம் ஒதுக்குகிறார்.

———————

| D–4615 |
|---|

| Sub. Code |
|---|
| 31014/33514 |

DISTANCE EDUCATION

COMMON FOR M.Com./M.Com. (F & C) DEGREE EXAMINATION, MAY 2024.

First Semester

BUSINESS ENVIRONMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. What is Business Environment?
வணிகச் சுற்றுச்சூழல் என்றால் என்ன?

2. What is meant by Social responsibility?
சமுதாயப் பொறுப்பு பற்றி அறிவது என்ன?

3. What is Mixed Economy?
கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?

4. What is meant by industrial policy?
தொழிற் கொள்கை பற்றி அறிவது என்ன?

5. What is Disinvestment?
முதலீடின்மை என்றால் என்ன?

6. Expand : WTO and SIDCO.
விரிவாக்கு : WTO மற்றும் SIDCO.

7. What is meant by Contract?

ஒப்பந்தம் என்பதன் பொருள் யாது?

8. State any two features of Globalisation.

உலகமயமாக்கலின் சிறப்பியல்புகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

9. Expand : MNC and IMF.

விரிவாக்கு : MNC மற்றும் IMF.

10. Define Public Distribution System.

பொது விநியோகமுறை என்பதை வரையறுக்க.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) What are the importance of business environment?

வணிகசூழலின் முக்கியத்துவங்கள் யாவை?

Or

(b) State the relationship between economic and non-economic environment.

பொருளாதாரம் மற்றும் பொருளாதாரம் சாராத சூழலுக்கு இடையேயான உறவுமுறையைக் கூறுக.

12. (a) What are the characteristics of economic system?

பொருளாதார முறையின் குணாதிசயங்கள் யாவை?

Or

(b) What are the significance of economic planning?

பொருளாதார திட்டமிடுதலின் முக்கியத்துவங்கள் யாவை?

13. (a) Bring out the benefits of privatization.

தனியார்மயமாக்கலின் நன்மைகளைத் தருக.

Or

(b) What are the features of Globalisation?

உலகமயமாக்கலின் அம்சங்கள் யாவை?

14. (a) What are the essentials of a valid contract?

செல்லத்தக்க ஒப்பந்தத்தின் தேவைகள் யாவை?

Or

(b) State the advantages of Foreign Direct Investment.

அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகளைக் கூறுக.

15. (a) State the objectives of GATT.

GATT ன் நோக்கங்களைக் கூறுக.

Or

(b) What are the advantages of World Bank?

உலக வங்கியின் நன்மைகள் யாவை?

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Describe the different components of business environment.

வணிகச் சுற்றுச்சூழலின் பல்வேறு கூறுகளை விவாதிக்க.

17. List out the major achievements of economic planning in India.

இந்தியாவின் பொருளாதார திட்டமிடலின் முக்கிய சாதனைகளைப் பட்டியலிடுக.

18. List out the major highlights of new industrial policy 1991.

புதியதொழிற் கொள்கையின் முக்கிய ஷரத்துக்களை பட்டியலிடுக.

19. Briefly discuss the various functions of Commercial Banks.

வணிக வங்கிகளின் பல்வேறு பணிகளை சுருக்கமாக விவாதிக்க.

20. State the merits and demerits of MNC.

பன்னாட்டுக் கழகத்தின் நன்மைகள் மற்றும் தீமைகளை கூறுக.

———————

| D–4616 |
|---|

| Sub. Code |
|---|
| 31021 |

DISTANCE EDUCATION

M.Com. DEGREE EXAMINATION, MAY 2024.

Second Semester

MARKETING MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. Define the term Market.

   சந்தை எனும் பதத்தை வரையறுக்க.

2. What is marketing Mix?

   சந்தைப்படுத்துதல் கலவை என்றால் என்ன?

3. Who is a Buyer?

   வாங்குபவர் என்றால் என்ன?

4. What is meant by product life cycle?

   பொருள் ஆயுள் சுழற்சி பற்றி அறிவது என்ன?

5. What is meant by distribution channel?

   வழங்கல் வழி பற்றி அறிவது என்ன?

6. Define Personal Selling.

   ஆள்சார் விற்பனையை வரையறுக்க.

7. What is meant by MIS?

MIS பற்றி அறிவது என்ன?

8. What is Co-operative Marketing?

கூட்டுறவு சந்தையியல் என்றால் என்ன?

9. What is e-marketing?

மின்னணு சந்தையியல் என்றால் என்ன?

10. What is Customer Relationship Management?

வாடிக்கையாளர் உறவு மேலாண்மை என்றால் என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) What are differences between marketing and selling?

சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனைக்கு இடையேயுள்ள வித்தியாசங்கள் யாவை?

Or

(b) Explain the need for marketing segmentation.

சந்தைப்படுத்துதல் பகுப்பின் அவசியத்தை விளக்குக.

12. (a) State the features of a product.

ஒரு பொருளின் அம்சங்களை குறிப்பிடுக.

Or

(b) Explain the various types of brands.

வணிக குறியீட்டின் பல்வேறு வகைகளை விளக்குக.

13. (a) What are the components of promotion mix?

ஊக்குவிப்பு கலவையின் கூறுகள் யாவை?

Or

(b) What are the characteristics of a good advertising copy?

ஒரு நல்ல விளம்பர நகலின் குணங்கள் யாவை?

14. (a) Bring out the importance of Management Information System.

மேலாண்மை தகவல் முறையின் முக்கியத்துவத்தை தருக.

Or

(b) Bring out the salient provisions of Consumer Protection Act.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் முக்கிய ஷரத்துக்களைத் தருக.

15. (a) What are the benefits of e-marketing?

மின்னணு சந்தையியலின் நன்மைகள் யாவை?

Or

(b) State the differences between Marketing and Customer Relationship Management.

சந்தையியல் மற்றும் வாடிக்கையாளர் உறவு மேலாண்மைக்கு இடையேயுள்ள வேறுபாட்டைத் தருக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. What are the determinants of consumer behavior? Explain.

நுகர்வோர் நடத்தையை தீர்மானிக்கக் கூடிய காரணிகள் யாவை? விளக்குக.

17. Explain the different phases of product life cycle.

பொருள் ஆயுள் சுழற்சியின் பல்வேறு நிலைகளை விளக்குக.

18. Examine the developing an integrated promotional mix.

ஒருங்கிணைந்த ஊக்குவிப்பு கலவையை உருவாக்குவதை ஆராய்க.

19. Explain the various process of marketing research.

சந்தையிடுகை ஆராய்ச்சியின் பல்வேறு படிநிலைகளை விவாதிக்கவும்.

20. Bring out the features of Co-operative Marketing.

கூட்டுறவு சந்தையியலின் அம்சங்களை தருக.

———————

| D–4617 |
|---|

| Sub. Code |
|---|
| 31022 |

DISTANCE EDUCATION

M.Com. DEGREE EXAMINATION, MAY 2024.

Second Semester

RESEARCH METHODOLOGY

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

PART A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL the questions.

1. Define Research.

   ஆராய்ச்சியை வரையறுக்கவும்

2. What are the characteristics of a good research design?

   ஒரு நல்ல ஆராய்ச்சி வடிவமைப்பின் பண்புகள் யாவை?

3. How to secure effective observation?

   பயனுள்ள கண்காணிப்பை எவ்வாறு பாதுகாப்பது?

4. Narrate the features of secondary sources.

   இரண்டாம் நிலை ஆதாரங்களின் அம்சங்களை விவரிக்கவும்

5. State the assumptions of case study method of investigation.

   வழக்கு ஆய்வி முறையின் அனுமானங்களைக் கூறவும்

6. What are the objectives of sampling?

மாதிரியின் நோக்கங்கள் யாவை ?

7. How is tabulation of data done?

தரவு அட்டவணை எவ்வாறு செய்யப்படுகிறது ?

8. When does a researcher have to make a hypothesis?

ஒரு ஆராய்ச்சியாளர் எப்போது ஒரு கருதுகோளை உருவாக்க வேண்டும் ?

9. Mention the purpose of a report.

அறிக்கையின் நோக்கத்தைக் குறிப்பிடவும்

10. Write a short note on Index.

குறியீடு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions choosing either (a) or (b).

11. (a) List out the importance of research.

ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை பட்டியலிடுக.

Or

(b) Mention the objectives of social research.

சமூக ஆராய்ச்சியின் நோக்கங்களைக் குறிப்பிடவும்

12. (a) State the steps in research process.

ஆராய்ச்சி செயல்முறையின் படிகளைக் குறிப்பிடவும்

Or

(b) What is the need for research design?

ஆராய்ச்சி வடிவமைப்பின் தேவை யாது ?

13. (a) Indicate the types of schedules.

அட்டவணைகளின் வகைகளைக் குறிக்கவும்

Or

(b) State the essentials of a good questionnaire.

ஒரு நல்ல கேள்வித்தாளின் அத்தியாவசியங்களைக் குறிப்பிடவும்

14. (a) Distinguish between editing of data and coding of data.

தரவைத் திருத்துதல் மற்றும் தரவுகளின் குறியீடுதலை வேறுபடுத்துக.

Or

(b) What are the purposes of pilot study?

முன்னோட்ட ஆய்வின் நோக்கங்கள் யாவை?

15. (a) Explain the various bases of classification.

வகைப்பாட்டின் பல்வேறு அடிப்படைகளை விளக்குக.

Or

(b) Discuss the importance of hypothesis in social research.

சமூக ஆராய்ச்சியில் கருதுகோளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும்

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Explain the types of experimental research design.

சோதனை ஆராய்ச்சி வடிவமைப்பின் வகைகளை விளக்குக.

17. Distinguish between primary data and secondary data.

முதன்மை தரவு மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை வேறுபடுத்துக.

18. Elucidate the various factors to be considered in making the decision of sampling method.

மாதிரி முறையின் முடிவை எடுப்பதில் கருத்தில் கொள்ள வேண்டிய பல்வேறு காரணிகளை தெளிவுபடுத்துக.

19. Enumerate the steps involved in writing a research report.

ஒரு ஆய்வு அறிக்கையை எழுதுவதில் உள்ள படிகளை பட்டியலிடவும்

20. Explain the role of library in research.

ஆராய்ச்சியில் நூலகத்தின் பங்கை விளக்குக.

**D–4618**

| Sub. Code |
|---|
| **31023/ 33523** |

DISTANCE EDUCATION

COMMON FOR M.Com./M.Com. (F & C) DEGREE EXAMINATION, MAY 2024.

Second Semester

ADVANCED COST ACCOUNTING

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours  Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. What is Cost?

   அடக்கவிலை என்றால் என்ன?

2. What is meant by Material Control?

   மூலப்பொருள் கட்டுப்பாடு பற்றி அறிவது என்ன?

3. What do you mean by Labour?

   உழைப்பு பற்றி நீவிர் அறிவது என்ன?

4. What is meant by Overhead?

   மேற்செலவுகள் பற்றி அறிவது என்ன?

5. List out any two features of Job Costing.

   பணி அடக்க விலையியலின் ஏதேனும் இரண்டு அம்சங்களை பட்டியலிடுக.

6. What is Unit Costing?

அலகு அடக்கவிலையியல் என்றால் என்ன?

7. What is Operating Costing?

இயக்க அடக்கவிலையியல் என்றால் என்ன?

8. What do you mean by Transport Costing?

போக்குவரத்து அடக்கவிலையியல் பற்றி நீவிர் அறிவது என்ன?

9. What is Standard Costing?

நிலையான அடக்கவிலையியல் என்றால் என்ன?

10. What is meant by Cost Reduction?

அடக்கவிலை குறைப்பு பற்றி அறிவது என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions, choosing either (a) or (b)

11. (a) Distinguish between cost accounting and financial accounting.

அடக்கவிலைக் கணக்கியல் மற்றும் நிதிநிலைக் கணக்கியலை வேறுபடுத்துக.

Or

(b) Consumption of materials per annum Rs.20,000

Order placing cost per order Rs.50

Cost per kilo of raw materials Rs.2

Storage cost 8% on average in inventory

Calculate economic order quantity. Also calculate the number of orders will be placed in a year.

ஒரு ஆண்டுக்கு பயன்படும் இடுபொருளின் மதிப்பு ரூ.20,000

ஒரு ஆணையிடும் செலவு ரூ.50

ஒரு கிலோ இடுபொருளின் மதிப்பு ரூ.2

பண்டகசாலையின் பாதுகாப்புச் செலவு 8% (பொருளின் மதிப்பின் மேல்)

சிக்கன கொள்முதல் அளவைக் கணக்கிடுக. ஒரு ஆண்டிற்கு எத்தனை ஆணை இடப்படும் என்பதையும் கணக்கிடுக.

12. (a) Find out wages per hour based on the following information :

Wages per year – Rs.2,400

Annual bonus–Rs.25% of wages

Contribution to P.F. @ 10% of wages

E.S.I. contribution @ 3% of wages

Total leave permitted during the year 60 days.

Cost of labour welfare amenities Rs.8,000.

No. of workmen 200

Normal idle time: 80 hours

Working day per annum: 320 days of 8 hours.

கீழ்வருகின்ற விவரங்களிலிருந்து ஒரு மணி அளவிற்கான கூலியினைக் கணக்கிடுக

ஆண்டுக்கான கூலி ரூ.2,400

ஆண்டு போனஸ் கூலியில் 25%

சேமநல நிதியில் செலுத்தியது கூலியில் 10%

தொழிலாளர் மாநில காப்பு நிதியில் செலுத்தியது கூலியில் 3%

நடப்பு ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை மொத்த நாட்கள் 60 நாட்கள் தொழிலாளர் வசதிக்காக செலவழித்தது ரூ.8,000 மொத்த வேலையாட்கள் 200 சாதாரண பணியில் இல்லா காலம் 80 மணிஅளவு ஆண்டு பணி நாட்கள் 320 ஒரு நாளைக்கு 8 மணி நேரம்.

Or

(b) Apportion the following expenses to various departments.

| | Total (Rs.) | A | B | C |
|---|---|---|---|---|
| Rent and Rates | 5,000 | | | |
| General lighting | 2,000 | | | |
| Floor Area (Sq. ft) | | 1,000 | 500 | 500 |
| Lighting point | | 3 | 2 | 5 |

பின்வரும் செலவினங்களை பல்வேறு துறைகளுக்கு பகிர்ந்தளிக்க

| | மொத்தம் (ரூ.) | A | B | C |
|---|---|---|---|---|
| வாடகை மற்றும் வீதங்கள் | 5,000 | | | |
| பொதுவான வெளிச்சம் | 2,000 | | | |
| தரையின் பரப்பு (சதுர அடி) | | 1,000 | 500 | 500 |
| விளக்குகளின் எண்ணிக்கை | | 3 | 2 | 5 |

13. (a) The following are the information relating to a contract account No. 123:

| | Rs. |
|---|---|
| Contract price | 6,00,000 |
| Wages | 1,64,000 |
| General expenses | 8,600 |
| Raw materials | 1,20,000 |
| Plant | 20,000 |

As on date, cash received was Rs.2,40,000 being 80% of work certified. The value of materials remaining at site was Rs.10,000. Depreciate plant by 10%. Prepare the contract account.

பின்வரும் விவரங்கள் ஒப்பந்த வேலை 123 க்கானவை :

| | ரூ. |
|---|---|
| ஒப்பந்த தொகை | 6,00,000 |
| கூலி | 1,64,000 |
| பொதுச் செலவுகள் | 8,600 |
| மூலப்பொருட்கள் | 1,20,000 |
| இயந்திரம் | 20,000 |

இன்றையத் தேதி முடிய ரூ.2,40,000 ரொக்கம் பெறப்பட்டுள்ளது. இத்தொகை சான்றிதழ் வழங்கப்பட்ட தொகையில் 80% ஆகும். இறுதியில் பயன்படுத்தப்படாமல் எஞ்சியுள்ள மூலப்பொருள் ரூ.10,000. இயந்திரத்திற்கு 10% தேய்மானம் எழுத வேண்டும். ஒப்பந்த கணக்கைத் தயாரிக்கவும்.

Or

(b) In Process I, 1000 units of raw materials were introduced at Rs.10 per unit. The other expenses incurred in this process were Rs.600 of the units introduced, 10% are normally lost in the course of manufacture and its scrap value is sold for Rs.3 per unit. Number of units produced in this process 750. Prepare the process account and find abnormal loss.

1,000 அலகுகள் மூலப்பொருட்கள், ஒன்று ரூ.10 வீதம் படிமுறை ஒன்றில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் படிமுறையில் செய்த மற்ற செலவுகள் ரூ.600. அறிமுகப்படுத்தப்பட்ட அலகுகளில் 10 சதவீதம் சாதாரண நட்ட அலகுகளாகும். கழிப்புகள் அலகு ஒன்று ரூ.3 க்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்தப் படிமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 750. படிநிலைக் கணக்கு மற்றும் அசாதாரண நட்டத்தைக் கண்டறிக.

14. (a) A transport company operates 4 buses on a route 100 kms. Long. Each bus makes three round trips per day on all 30 days in a month, On an average 20% of the vehicles are in garage for repairs and maintenance. Ascertain the total distance covered by the buses in one month period.

ஒரு போக்குவரத்து நிறுவனமானது நான்கு பேருந்துகளை 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வழித்தடத்தில் இயக்குகிறது ஒரு மாதத்தில் உள்ள 30 நாட்களில் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பேருந்தும் மூன்று முழு பயணத்தை மேற்கொண்டது. சராசரியாக 20% பேருந்தானது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பிற்காக வாகனக்கூட்டத்தில் இருக்கும். ஒரு மாத காலத்தில் பேருந்துகளானது அடைந்த மொத்த தூரத்தைக் கணக்கிடுக.

Or

(b) What is Batch Costing? How does it differ from job costing?

தொகுதி அடக்கவிலையியல் என்றால் என்ன? அது பணிவழி அடக்கவிலையியலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

15. (a) From the following data calculate Labour variance for the two departments.

| Particulars | Departments | |
|---|---|---|
| | A (Rs.) | B (Rs.) |
| Actual wages | 2,000 | 1,800 |
| Standard hours produced | 8,000 | 6,000 |
| Standard rate per hour | 30 paise | 35 paise |
| Actual hours worked | 8,200 | 5,800 |

பின்வரும் தகவல்களிலிருந்து இரு துறைகளுக்கான உழைப்பு மாறுபாட்டை காண்க.

| விவரங்கள் | துறைகள் | |
|---|---|---|
| | A (ரூ.) | B (ரூ.) |
| உண்மையான கூலி | 2,000 | 1,800 |
| திட்ட நேரத்திற்கான உற்பத்தி | 8,000 | 6,000 |
| ஒரு மணிக்கான நிலையான வீதம் | 30 பைசா | 35 பைசா |
| உண்மையாக உழைத்த நேரங்கள் | 8,200 | 5,800 |

Or

(b) State the reasons for differences in profits revealed by cost and financial accounts.

அடக்கவிலை கணக்கியல் மற்றும் நிதிநிலைக் கணக்கியல் வெளிப்படுத்தக்கூடிய இலாப வேறுபாட்டிற்க்கான காரணங்களை கூறுக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. From the following information, prepare a cost sheet

| | Rs. | | Rs. |
|---|---|---|---|
| Stock on 01.01.2018: | | Sales | 95,000 |
| Raw Materials | 30,500 | Direct Wages | 20,400 |
| Finished Goods | 20,400 | Office Expenses | 5,400 |
| Stock on 31.01.2018: | | Selling Expenses | 3,800 |
| Raw Materials | 48,500 | Distribution Expenses | 2,500 |
| Finished goods | 10,000 | Factory expenses | 10,500 |
| Work in Progress 01.01.2018 | 8,000 | Purchase of Raw materials | 25,000 |
| Work in Progress 31.01.2018 | 9,000 | | |

பின்வரும் விவரங்களிலிருந்து ஒரு அடக்கவிலை பட்டிலை தயாரிக்க :

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| 01.01.2018 அன்றைய சரக்கிருப்பு: | | விற்பனை | 95,000 |
| மூலப் பொருள்கள் | 30,500 | நேரடி கூலி | 20,400 |
| முடிவுற்ற பொருள்கள் | 20,400 | அலுவலக செலவுகள் | 5,400 |
| 31.01.2018 அன்றைய சரக்கிருப்பு: | | விற்பனை செலவுகள் | 3,800 |
| மூலப்பொருள்கள் | 48,500 | பகிர்ந்தளிப்பு செலவுகள் | 2,500 |
| முடிவுற்ற பொருள்கள் | 10,000 | ஆலை செலவுகள் | 10,500 |
| 01.01.2018 அன்றைய பகுதி முடிவுற்ற பொருள்கள் | 8,000 | மூலப்பொருள்கள் வாங்கியது | 25,000 |
| 31.01.2018 அன்றைய பகுதி முடிவுற்ற பொருள்கள் | 9,000 | | |

17. In a manufacturing company a daily wage rate guaranteed for a worker is Rs.250 and the standard output fixed for the month is 1,000 articles representing 100 percent efficiency. The daily wage rate is without bonus to those workers who show up to $66\frac{2}{3}$ percent of the efficiency standard. Beyond this there is a bonus payable in a graded scale in a fixed ratio to the increased output as follows:

| Efficiency | Bonus payable |
|---|---|
| 90% | 10% |
| 100% | 20% |

Further increase of 1 percent bonus for every 1 percent further rise in efficiency. Find out the total earnings of A, B, C and D who have worked for 26 days in a month. Workers output is :

A – 600 articles, B – 900 articles, C – 1000 articles and D – 1080 articles.

ஒரு உற்பத்தி நிறுவனத்தில் ஒரு தொழிலாளிக்கு உத்திரவாதமளிக்கப்பட்ட தினக்கூலி ரூ.250 ஆகும். 100% திறமையைக் குறிக்கும் ஒரு மாதத்திற்கான திட்ட உற்பத்தி 1000 பொருட்கள் ஆகும். $66\frac{2}{3}$ சதவீதத்திற்கு குறைவாகவுள்ள வேலையாட்களுக்கு தினக்கூலி மட்டும் போனஸ் இல்லாமல் அளிக்கப்படுகிறது. அதற்கு மேல் திறமையுள்ளவர்களுக்கு போனஸ் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| திறமை | செலுத்தக்கூடிய போனஸ் |
|---|---|
| 90% | 10% |
| 100% | 20% |

இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு சதவித திறமை அதிகரிப்புக்கும் ஒவ்வொரு சதவீத போனஸ் அளிக்கப்படும். ஒரு மாதத்தில் 26 நாட்கள் வேலை செய்து முறையே 600, 900, 1000 மற்றும் 1080 பொருட்களை உற்பத்தி செய்த A, B, C மற்றும் D ஆகியோருடைய மொத்த ஊதியத்தைக் கண்டுபிடிக்க.

18. A Product is obtained through three processes. From the following particulars, prepare process accounts, abnormal profit and loss accounts.

| | Processes | | |
|---|---|---|---|
| | I | II | III |
| Materials | 2,600 | 1,980 | 2,962 |
| Direct wages | 2,000 | 3,000 | 4,000 |
| Output (in units) | 950 | 840 | 750 |
| Normal loss | 5% | 10% | 15% |
| Sale of scrap (per unit) | Rs.2 | Rs.4 | Rs.5 |

General expenses Rs.9000. 1000 units at Rs.3 each were introduces in process I.

ஒரு பொருள் மூன்று தனித்தனி படிமுறைகளைக் கடந்த பின் பெறப்படுகிறது. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து படிமுறைக் கணக்கு மற்றும் அசாதாரண இலாப மற்றும் நட்டத்தைக் கண்டறிக

| | படிமுறைகள் | | |
|---|---|---|---|
| | I | II | III |
| மூலப்பொருள்கள் | 2,600 | 1,980 | 2,962 |
| நேரடி கூலி | 2,000 | 3,000 | 4,000 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | 950 | 840 | 750 |
| சாதாரண நட்டம் | 5% | 10% | 15% |
| எஞ்சிய பொருளை விற்றது (ஓர் அலகுக்கு) | ரூ.2 | ரூ.4 | ரூ.5 |

செலவுகள் ரூ.9,000, 1,000 அலகுகள் ஒன்று ரூ.3 வீதம் படிமுறை I ஒன்றில் அறிமுகப்படுத்தப்பட்டது.

19. Given below are the particulars regarding the construction of a building. From this, prepare the contract accounts and ascertain the profit to be transferred to profit and loss account and the amount to be transferred to reserve:

| | Rs. |
|---|---|
| Total contract price | 2,50,000 |
| Material sent to site | 85,000 |
| Labour engaged at site | 74,000 |
| Plant installed at site | 15,000 |
| Direct expenses | 3,160 |
| Establishment charges | 4,120 |
| Material returned to stores | 550 |
| Value of work certified | 1,95,000 |
| Value of work not certified | 4,500 |
| Stock of materials (December 31) | 1,880 |
| Wages accrued and due (finally) | 2,400 |
| Direct expenses accrued (finally) | 240 |
| Value of plant (December 31) | 11,000 |
| Cash receive from contractee | 1,80,000 |

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை. ஒரு கட்டிடக் கட்டுமானத்திற்கான ஒப்பந்தம் பற்றிய விபரங்கள் இதிலிருந்து, ஒப்பந்தக் கணக்கைத் தயாரித்து, இலாபநட்டக் கணக்கிற்கு மாற்ற வேண்டிய தொகையையும், காப்பிற்கு மாற்ற வேண்டிய தொகையையும் கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| மொத்த ஒப்பந்த மதிப்பு | 2,50,000 |
| வேலையிடத்திற்கு அனுப்பப்பட்ட மூலப்பொருட்கள் | 85,000 |
| வேலையிடத்தில் கூலி | 74,000 |
| வேலையிடத்தில் பொருத்தப்பட்ட இயந்திரம் | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 3,160 |
| நிறுவனச் செலவுகள் | 4,120 |
| மூலப் பொருள் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டது | 550 |
| சான்றிதழ் வழங்கப்பட வேலையின் மதிப்பு | 1,95,000 |
| சான்றிதழ் வழங்கப்படாத வேலையின் மதிப்பு | 4,500 |
| மூலப் பொருள் இருப்பு (டிசம்பர் 31) | 1,880 |
| கொடுபட வேண்டிய கூலி (இறுதியில்) | 2,400 |
| கொடுபட வேண்டிய நேரடிச் செலவு (இறுதியில்) | 240 |
| இயந்திரத்தின் மதிப்பு (டிசம்பர் 31) | 11,000 |
| ஒப்பந்தப்பட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொகை | 1,80,000 |

20. SV Ltd. has furnished the following data :

| Particulars | Budgeted | Actual (March 2014) |
|---|---|---|
| Number of working days | 25 | 27 |
| Production (units) | 20,000 | 22,000 |
| Fixed overheads (Rs.) | 30,000 | 31,000 |

Calculate various fixed overhead variances.

எஸ் வி லிமிடெட் பின்வரும் தகவல்களை அளிக்கிறது

| விபரங்கள் | திட்டமிடப்பட்டது | உண்மையானது (மார்ச் 2014) |
|---|---|---|
| வேலை நாட்கள் எண்ணிக்கை | 25 | 27 |
| உற்பத்தி (அலகுகள்) | 20,000 | 22,000 |
| நிலையான மேற்செலவுகள் (ரூ.) | 30,000 | 31,000 |

பல்வேறு நிலையான மேற்செலவு வேறுபாடுகளைக் கணக்கிடுக.

———————

| D–4619 |
|---|

| Sub. Code |
|---|
| 31024/33524 |

DISTANCE EDUCATION

COMMON FOR M.Com./M.Com. (F & C) DEGREE EXAMINATION, MAY 2024.

Second Semester

FINANCIAL SERVICES

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. Define the term financial services.
   நிதிச் சேவைகள் என்ற சொல்லை வரையறுக்க.

2. What are the objectives of money market?
   பணச் சந்தையின் நோக்கங்கள் யாவை?

3. What is meant by primary market?
   முதன்மை சந்தை பற்றி அறிவது என்ன?

4. List out various investment companies.
   பல்வேறு முதலீட்டு நிறுவனங்களை பட்டியலிடுக.

5. Mention any four non-fund services.
   நிதியல்லாத சேவைகள் ஏதேனும் நான்கை குறிப்பிடுக.

6. Give the meaning of underwriting.
   ஒப்புறுதியின் பொருளைக் குறிப்பிடுக.

7. Synthesis the term of consumer finance.

நுகர்வோர் நிதி என்ற சொல்லை கூறுக.

8. Define the term merger and takeover.

இணைத்தல் மற்றும் கையகப்படுத்துதல் என்ற சொல்லை வரையறுக்க.

9. What are the need for export finance?

ஏற்றுமதி நிதிக்கான தேவை யாவை?

10. What is meant by corporate advisory services?

நிறும ஆலோசனை சேவைகள் பற்றி அறிவது என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Describe the nature of financial service industry.

நிதிச் சேவைத் துறையின் தன்மைகளை விவரிக்க.

Or

(b) Distinguish capital market from money market.

பணச் சந்தையிலிருந்து மூலதனச் சந்தையை வேறுபடுத்துக.

12. (a) Explain the various kinds of financial services provided by IDBI.

IDBI வழங்கும் பல்வேறு வகையான நிதிச் சேவைகளை விளக்குக.

Or

(b) Enumerate the role of secondary market in stock exchange.

பங்குச் சந்தையில் இரண்டாம் நிலைசந்தையின் பணிகளைக் கணக்கிடுக.

13. (a) Describe the features of hire purchase financing.

வாடகை கொள்முதல் நிதியின் அம்சங்களை விவரிக்க.

Or

(b) Write a detail on the RBI guidelines of lease financing.

குத்தகை நிதியுதவியின் RBI வழிகாட்டுதல்கள் பற்றிய விவரங்களை எழுதவும்.

14. (a) Compare factoring and forfeiting.

கடன் வசூலிக்கும் முகமையையும் பங்கு ஒறுப்பிழப்பையும் ஒப்பிடுக.

Or

(b) Outline the different methods of portfolio management.

இலாக்கா மேலாண்மை நிர்வாகத்தின் பல்வேறு முறைகளை கோடிட்டுக் காட்டுக.

15. (a) Indicate the functions of chit fund company.

சீட்டு நிதி நிறுவனத்தின் செயல்பாடுகளைக் குறிப்பிடுக.

Or

(b) Illustrate the important functions of credit rating agencies.

கடன் மதிப்பீட்டு நிறுவனங்களின் முக்கிய செயல்பாடுகளை விளக்குக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Discuss the role of capital markets in the economic development of our country.

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மூலதனச் சந்தைகளின் பங்கைப் பற்றி விவாதிக்க.

17. "The role of SEBI as a market regulator" – Discuss.

"பங்குசந்தை கட்டுப்பாட்டாளராக இருப்பது செபியின் பணியாகும்" – விவாதிக்க.

18. Examine the various steps in leasing transaction and also advantages of lease financing.

குத்தகை பரிவர்த்தனையின் பல்வேறு படிகள் மற்றும் குத்தகை நிதியுதவியின் நன்மைகளையும் ஆராய்க.

19. Evaluate the operational guidelines of SEBI on asset management company of mutual funds.

பரஸ்பர நிதிகளின் சொத்து மேலாண்மை நிறுவனத்தில் செபியின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை மதிப்பிடுக.

20. Elaborate the role and power of national housing bank.

தேசிய வீட்டுவசதி வங்கியின் பங்கு மற்றும் அதிகாரத்தை விவரிக்க.

———————

**D–4620**

| **Sub. Code** |
| --- |
| **31031/33531** |

DISTANCE EDUCATION

COMMON FOR M.Com./M.Com. (F & C) DEGREE EXAMINATION, MAY 2024.

Third Semester

INVESTMENT ANALYSIS AND PORTFOLIO MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. What is Investment?

   முதலீடு என்றால் என்ன?

2. What do you mean by Risk?

   இடர் பற்றி நீவீர் அறிவது என்ன?

3. What is Investment Process?

   முதலீட்டு செயல்முறை என்றால் என்ன?

4. What is meant by Capital Market?

   மூலதன சந்தை பற்றி அறிவது என்ன?

5. Define the term "Risk".

   இடர் எனும் பதத்தை வரையறுக்க.

6. What is Mutual Fund?

   பரஸ்பர நிதி என்றால் என்ன?

7. What is meant by Market Indicators?

   சந்தை குறிகாட்டிகள் பற்றி அறிவது யாது?

8. What do you mean by future option?
எதிர்கால விருப்பம் பற்றி நீவீர் அறிவது யாது?

9. What is Portfolio Revision?
துறை மறுபார்வை என்றால் என்ன?

10. What is meant by Portfolio Management?
துறை மேலாண்மை பற்றி அறிவது என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) List out the various types of investors.
முதலீட்டாளர்களின் பல்வேறு வகைகளை பட்டியலிடுக.

Or

(b) Differentiate investment with speculation.
முதலீட்டை ஊகவணிகத்துடன் வேறுபடுத்துக.

12. (a) What are the features of an Ideal Investment?
ஒரு நிறைவான முதலீட்டின் அம்சங்கள் யாவை?

Or

(b) What are the classifications of systematic risk? Explain.
முறையான இடரின் வகைகப்பாடுகள் யாவை? விளக்குக.

13. (a) What are the causes of risk?
இடரின் காரணங்கள் யாவை?

Or

(b) How does SEBI regulate the primary market?
முதல்நிலை சந்தையை எப்படி SEBI முறைப்படுத்துகிறது?

14. (a) What are the prerequisites to invest shares in India?

இந்தியாவில் பங்குகளை முதலீடு செய்வதற்கான முன்தேவைகள் யாவை?

Or

(b) Briefly explain Sharpe Model.

ஷால்ஸ் மாதிரியை சுருக்கமாக விளக்குக.

15. (a) List out the assumptions of Capital Asset Pricing Model.

மூலதன சொத்து விலை மாதிரியின் எடுகோள்களை பட்டியலிடுக.

Or

(b) What are the factors to be considered while constructing a portfolio?

ஒரு துறையை நிர்வகிக்கும் பொழுது கருத்தில் கொள்ளவேய்டிய காரணிகள் யாவை?

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Describe the various Investment Avenues in India.

இந்தியாவிலுள்ள பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளை விளக்குக.

17. State the selected list of proverbs in stock market.

பங்குச் சந்தையில் தேர்ந்தெடுக்கப்படும் பழமொழிகளின் பட்டியலை கூறுக.

18. Briefly explain the various mutual fund schemes launched in India.

இந்தியாவில் தொடங்கப்பட்ட பல்வேறு பரஸ்பரநிதி திட்டத்தினை சுருக்கமாக விளக்குக.

19. Describe the different variables that are to be considered while making economic analysis.

பொருளாதார பகுப்பாய்வினை மேற்கொள்ளும் பொழுது கவனிக்க வேண்டிய பல்வேறு மாறிலிகளை விளக்குக.

20. Explain the Random - Walk theory.

ரேண்டம் வாக் கோட்பாட்டை விளக்குக.

---

| D–4621 |
|---|

| Sub. Code |
|---|
| 31032/33532 |

DISTANCE EDUCATION

Common for M.Com./M.Com. (F & C) DEGREE EXAMINATION, MAY 2024.

Third Semester

FINANCIAL MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL the questions.

1. Define them Financial Management.

   நிதி மேலாண்மை எனும் பதத்தை வரையறுக்க.

2. What is finance function?

   நிதி சார்பு என்றால் என்ன?

3. What is meant by Preference shares?

   முன்னுரிமை பங்குகள் பற்றி அறிவது என்ன?

4. What is Capital Market?

   மூலதன சந்தை என்றால் என்ன?

5. What do you mean by Capital Structure?

   மூலதன கட்டமைப்பு பற்றி நீவிர் அறிவது என்ன?

6. Define the term Working Capital.

   நடைமுறை மூலதனம் எனும் பதத்தை வரையறுக்க.

7. What do you mean by Capital Expenditure Budget?

மூலதன செலவின் திட்டம் பற்றி நீவிர் அறிவது என்ன?

8. What do mean by Cost of Debt?

கடன் சார்ந்த அடக்கவிலை பற்றி நீவிர் அறிவது என்ன?

9. What is meant by Letter of Credit?

வாணிக உறுதிக்கடிதம் பற்றி அறிவது என்ன?

10. What is International Financial Management?

பன்னாட்டு நிதி மேலாண்மை என்றால் என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) What are the objectives of financial management?

நிதி மேலாண்மையின் நோக்கங்கள் யாவை?

Or

(b) Distinguish between profit maximization and wealth maximization.

இலாப அதிகரிப்பு மற்றும் வள அதிகரிப்பை வேறுபடுத்துக.

12. (a) Explain the different kinds of debentures.

கடனீட்டுப்பத்திரத்தின் பல்வேறு வகைகளை விளக்குக.

Or

(b) Bring out the disadvantages of over capitalization.

